## சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்களை தரம் பிரித்தலுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்

மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஒவ்வொரு ஆண்டும் தரம் பிரித்தல் செய்திட வேண்டும். சமுதாய அமைப்புகளின் செயல்பாட்டுத் தரத்தினை மதிப்பீடு செய்து அதில் உள்ள குறைபாடுகளை சரி செய்வதால் அமைப்புகள் நிலைத்ததன்மையுடன் செயல்பட வாய்ப்பினை உருவாக்குதல், சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே சுய மதிப்பீடு செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் சிறப்பான செயல்பாட்டிற்கு வழிவகுத்தல் போன்ற நோக்கங்களுக்காக தரம் பிரித்தல் அவசியமாகிறது. மேலும் இயக்க செயல்பாடுகள் குறித்து உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி இலக்கினை எளிதில் அடைவதற்கான வழிவகை செய்கிறது.

**மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான தரம்பிரித்தலுக்கான குழுக்கள்**
**தரம்பிரிக்கும் குழுவானது கீழ்கண்ட 3 நபர்களை உள்ளடக்கியதாகும்.**

1. சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்–1 நபர் (அருகிலுள்ள ஊராட்சியைச் சேர்ந்தவர்)
2. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பிரதிநிதி –1 நபர் ஊராட்சியை சேர்ந்தவர்)
3. சமுதாய தணிக்கையாளர் – 1 நபர் களப்பகுதியைச் சேர்ந்தவர்

**தரம் பிரித்தலுக்கான ஆயத்தப்பணிகள்**

குழுக்களை உரிய காலத்தில் தர ஆய்விற்கு உட்படுத்துவது என்பது மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் முக்கிய பொறுப்பாகும். இதன் பொருட்டு:

1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் இணைந்துள்ள, அனைத்து சுய உதவிக் குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை தர ஆய்வு செய்யப்படவேண்டும். மகளிர் சுய உதவிக் குழுவின் அனைத்து பதிவேடுகளையும் பூர்த்தி செய்து தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும். புதிய சுய உதவிக் குழுக்கள் மூன்று மாதம் முடிந்தவுடன் தர ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும்.
2. தர ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டிய அட்டவணையை அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் மற்றும் உறுப்பினர்களுக்கும் முன்னதாக தெரிவிக்கப்படவேண்டும். தரம் பிரித்தலில் அனைத்து உறுப்பினர்கள் கலந்துக்கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.

**தரம் பிரித்தலுக்கான காரணிகள்**

சுய உதவிக் குழுக்கள் நிலைத்த தன்மையுடன் செயல்படுவதை உறுதி செய்ய முக்கியமான கீழ்கண்ட ஐந்து காரணிகளைக் கருத்தில் கொண்டு தரம் பிரித்தல் நடத்தப்படவேண்டும்.

1. தொடர் கூட்டங்கள் (Regular Meetings) நடத்துதல்
2. தொடர் சேமிப்பு (Regular Savings)
3. உள்கடன் வழங்குதல் (Internal Lending)
4. கடன் திருப்பம் (Loan repayment)
5. வெளிப்படையான நிதி நிர்வாகம் (Transparent and Regular Book keeping)

**தரம்பிரித்தலின்போது ஆய்வு செய்யப்படவேண்டிய ஆவணங்கள்**

1. குழு தீர்மான புத்தகம் & வருகைப்பதிவு
2. வங்கி கணக்கு புத்தகம்
3. பொதுப் பேரேடு மற்றும் ரொக்கப் பதிவேடு
4. கடன் பேரேடு
5. குழு உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்தல்

**தரம் பிரித்தல் குழுவிற்கு வழங்கப்படும் மதிப்பூதியம்**

ஒரு மகளிர் சுய உதவிக் குழுவை தரம் பிரித்தலுக்காக மதிப்பூதியம் ரூ. 60 நிர்ணயிக்கலாம். அதில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூ. 10/– சேவை கட்டணமாகவும் தரம் பிரித்தல் பணிக்காக குழுவிற்கு ரூ.50/– வழங்கலாம். மேலும் சேவை கட்டணத்திலிருந்து தரம் பிரித்தல் படிவம் அச்சடித்திட ரூ.1.00க்கு மிகாமல் பயன்படுத்திக் கொள்ளவும்.

**தரம் பிரித்தலை கண்காணித்தல்**

குழு தரம் பிரித்தல் பணிக்கு முன்பாக, தரம்பிரித்தல் குழுவினருக்கு பயிற்சி அளிக்கப்படவேண்டும். பயிற்சியின் போது மாதிரிப் படிவங்களுடன் ஒரு சுய உதவிக் குழுவில் தரம்பிரித்தல் குழுவினரை களப் பரிசோதனையில் ஈடுபடச் செய்து சந்தேகங்களுக்கு தெளிவுரை நல்க வேண்டும்.

- தரம் பிரித்தல் குற்றம் காணும் முயற்சி அல்ல கற்கும் முறையாக, நட்பு ரீதியில் அணுக வேண்டும். இதனால் யாவரும் அக்குழுவின் திறமைகளையும் பலவீனங்களையும் தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைகிறது.
- குழு தரம்பிரிக்கும் பொழுது அந்தத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் பார்வையாளராக மட்டும் இருத்தல் வேண்டும்.

- குழு தரம் பிரித்த பிறகு நிறை, குறைகள் மற்றும் கவனம் செலுத்தப்பட வேண்டிய இனங்களைக் கண்டு தீர்மானப் பதிவேட்டில் குழு தரம்பிரிப்பவர் கண்டிப்பாக பதிவு செய்தல் வேண்டும். இக்குறிப்பு குழுவின் அடுத்தக் கூட்டத்தில் முக்கிய பொருளாக எடுத்து விவாதிப்பதற்கு உதவியாக இருக்கும்.
- குழு தரம்பிரித்தல் ஆகஸ்டு – செப்டம்பர் மாதத்திற்குள் செயல்படுத்தல் வேண்டும். குழு உறுப்பினர்கள் அனைவரையும் வரசெய்வது, தரம்பிரித்தல் முடியும் வரை ஆர்வமாக கலந்து கொள்ள செய்வது அவர் கடமையாகும்.
- தரம் பிரித்தல் பணி என்பது ஒரு பயிற்சி வகுப்பாகவும் பாடமாகவும் கருதுவது மிக அவசியம், தரம்பிரித்தல் முடிந்தவுடன் குழு உறுப்பினர்கள் குழுவின் குறைபாடுகளை நீக்கும் செயலில் ஆர்வமாக ஈடுபட இப்பணி தூண்டுதலாக அமைய வேண்டும்.

**தர ஆய்வுக்குப்பின் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள்**

1. தர ஆய்வு செய்யப்பட்ட குழுவின் தரம் குறித்து அனைத்து உறுப்பினர்களுக்கும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் தெரியப்படுத்த வேண்டும்.
2. தர ஆய்வின் முடிவின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை (பயிற்சி தேவை, நிதியிணைப்பு, சுழல் நிதி போன்றவை) சம்மந்தப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுவும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பும் மேற்கொள்ளும்.
3. தர ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட C & D தரம் பெற்ற சுய உதவிக் குழுக்களைத் தொடர்ந்து கண்காணித்தும், போதிய பயிற்சியளித்தும் தரம் உயர்த்த சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநரை பொறுப்பாக்க வேண்டும். குழுவின் மேம்பாட்டிற்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு தர மதிப்பீட்டு குழு வழிகாட்டியாக இருக்கும்.

இணைப்பு: சுய உதவிக் குழுக்களின் தரமதிப்பீட்டிற்கான படிவம் – இணைப்பு–1

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை தரம் பிரித்தல்**

- அனைத்து சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து நிதி மேலாண்மையை மேம்படுத்த, சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு துணை புரிந்திட, அரசு திட்டங்களை ஒருங்கிணைத்திட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை தரம் பிரித்தல் அவசியமாகிறது.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை தரம்பிரிக்க கீழ்கண்ட 4 நபர்களை கொண்ட ஆய்வு குழு அமைக்கப்பட வேண்டும்.**

**மண்டல உதவித் திட்ட அலுவலர் தலைமையில் இக்குழு செயல்படும்.**(அருகில் உள்ள மண்டல பொறுப்பு உதவித் திட்ட அலுவலர்)

1. அருகில் உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர் – 1 நபர்
2. அருகில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி –1 நபர்
3. அருகில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கணக்காளர் – 1 நபர்
4. அருகில் உள்ள ஊராட்சியைச் சேர்ந்த சமுதாய வளப் பயிற்றுநர் – 1 நபர்

மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருது பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு தர ஆய்வு குழுவில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

**தரம் பிரித்தலின்போது ஆய்வு செய்யப்படவேண்டிய ஆவணங்கள்**

1. தீர்மான புத்தகம் & வருகைப்பதிவு
2. வங்கி கணக்கு புத்தகம் ( பொது கணக்கு, சமுதாய முதலீட்டு நிதி கணக்கு மற்றும் இதர)
3. வரவு ரசீது மற்றும் செலவின சீட்டு (அ) பணம் பட்டுவாடா ரசீது
4. பொதுப் பேரேடு மற்றும் ரொக்கப் பதிவேடு
5. கடன் விண்ணப்பம் மற்றும் கடன் பேரேடு
6. கடன் கண்காணிப்பு பதிவேடு
7. சொத்து பதிவேடு மற்றும் உறுப்பினர் விவரப் பதிவேடு

**தர ஆய்வுக்குப்பின் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள்**

1. தர ஆய்வு செய்யப்பட்ட குழுவின் தரம் குறித்து அனைத்து உறுப்பினர்களுக்கும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் தெரியப்படுத்த வேண்டும்.
2. தர ஆய்வு முடிவின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை (பயிற்சி, நிதியிணைப்பு, ஆதார நிதி / சுழல் நிதி போன்றவை) சம்மந்தப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பும் மேற்கொள்ளும்.
3. தர ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட C & D தரம் பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை தொடர்ந்து கண்காணித்தும், போதிய பயிற்சியளித்தும் தரம் உயர்த்த சம்மந்தப்பட்ட வட்டார ஒருங்கிணைப்பாளரை பொறுப்பாக்க வேண்டும். கூட்டமைப்பின் மேம்பாட்டிற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு தரமதிப்பீட்டு குழு வழிகாட்டியாக இருக்கும்.

**தரம் பிரித்தலை கண்காணித்தல்**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை தரம் பிரித்தல் பணிக்கு முன்பாக, தரம்பிரித்தல் குழுவினருக்கு பயிற்சி அளிக்கப்படவேண்டும். பயிற்சியின் போது மாதிரிப் படிவங்களுடன் ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு தரம்பிரித்தல் குழுவினரை களப் பரிசோதனையில் ஈடுபடச் செய்து சந்தேகங்களுக்கு தெளிவுரை நல்க வேண்டும்.

- தரம் பிரித்தல் குற்றம் காணும் முயற்சி அல்ல கற்கும் முறையாக, நட்பு ரீதியில் அணுக வேண்டும். இதனால் யாவரும் அக்கூட்டமைப்பின் திறமைகளையும் பலவீனங்களையும் தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைகிறது.
- அக்கூட்டமைப்பினை தரமதிப்பீட்டு குழு தரம்பிரிக்கும் பொழுது அந்த வட்டார ஒருங்கிணைப்பாளர் பார்வையாளராகவும் சரியான முறையில் குழு தரம்பிரிக்கின்றதா என்பதை ஆய்வு செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.
- குழு தரம் பிரித்த பிறகு நிறை, குறைகள் மற்றும் கவனம் செலுத்தப்பட வேண்டிய இனங்களைக் கண்டு தீர்மானப் பதிவேட்டில் குழு தரம்பிரிப்பவர் கண்டிப்பாக பதிவு செய்தல் வேண்டும். இக்குறிப்பு குழுவின் அடுத்தக் கூட்டத்தில் முக்கிய பொருளாக எடுத்து விவாதிப்பதற்கு உதவியாக இருக்கும்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு தரம்பிரித்தல் ஆகஸ்டு – செப்டம்பர் மாதத்திற்குள் செயல்படுத்தல் வேண்டும்.
- கூட்டமைப்பின் குடியிருப்பு மன்ற பிரதிநிதிகள் அனைவரையும் வரசெய்வது, தரம்பிரித்தல் முடியும் வரை ஆர்வமாக கலந்துக் கொள்ளச் செய்வது அவசியமாகும்.
- தரம் பிரித்தல் பணி என்பது ஒரு பயிற்சி வகுப்பாகவும் பாடமாகவும் கருதுவது மிக முக்கியம், தரம்பிரித்தல் முடிந்தவுடன் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் குழுவின் குறைபாடுகளை நீக்கும் செயலில் ஆர்வமாக ஈடுபட இப்பணி தூண்டுதலாக அமைய வேண்டும்.

**தரம்பிரித்தல் குழுவிற்கு வழங்கப்படும் மதிப்பூதியம்**

ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு தரம் பிரித்தலுக்காக மதிப்பூதியம் ரூ. 500 நிர்ணயிக்கலாம். அதில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூ. 50/– சேவை கட்டணமாகவும் தரம் பிரித்தல் பணிக்காக குழுவிற்கு ரூ.450/– வழங்கலாம். மேலும் சேவை கட்டணத்திலிருந்து தரம் பிரித்தல் படிவம் அச்சடித்திட ரூ.1.00க்கு மிகாமல் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இணைப்பு: ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்களின் தரமதிப்பீட்டிற்கான படிவம்–2

**கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் தரம் பிரித்தல்**

- அனைத்து இலக்கு மக்களை ஒருங்கிணைத்து சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு துணை புரிந்திட, அரசு நல திட்டங்களை ஒருங்கிணைத்து மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்கள் பயன்பெற தனி கவனம் தொடர்ந்து செலுத்துவதற்காக கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தினை தரம் பிரித்தல் அவசியமாகிறது.

**கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களை தரம்பிரிக்க கீழ்கண்ட 4 நபர்களை கொண்ட ஆய்வு குழு அமைக்கப்பட வேண்டும்.**

**அருகில் உள்ள மண்டல உதவித் திட்ட அலுவலர் தலைமையில் இக்குழு செயல்படும்**

1. அருகில் உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர் – 1 நபர்
2. அருகில் உள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் பிரதிநிதி –1 நபர்
3. அருகில் உள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்க கணக்காளர் – 1 நபர்
4. அருகில் உள்ள ஊராட்சியைச் சேர்ந்த சமுதாய வளப் பயிற்றுநர் – 1 நபர்

**தரம் பிரித்தலின்போது ஆய்வு செய்யப்படவேண்டிய ஆவணங்கள்**

1. சங்க தீர்மான புத்தகம் & வருகைப்பதிவு
2. வங்கி கணக்கு புத்தகம்
3. வரவு ரசீது மற்றும் செலவின சீட்டு (அ) பணம் பட்டுவாடா ரசீது
4. பொதுப் பேரேடு மற்றும் ரொக்கப் பதிவேடு
5. கடன் திரும்ப பெறுதல் பதிவேடு
6. பயனாளிகள் பதிவேடு
7. சொத்து பதிவேடு மற்றும் உறுப்பினர் விவரப் பதிவேடு

**தர ஆய்வுக்குப்பின் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள்**

1. தர ஆய்வு செய்யப்பட்ட சங்கத்தின் தரம் குறித்து அனைத்து குடியிருப்பு பிரதிநிதிகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.
2. தர ஆய்வின் முடிவின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை (பயிற்சி தேவை, நிதியிணைப்பு போன்றவை) சம்மந்தப்பட்ட கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களும் துணைக் குழுக்களும் பங்கேற்று மேற்கொள்ளும்.
3. தர ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட C & D தரம் பெற்ற கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தை தொடர்ந்து கண்காணித்தும், போதிய பயிற்சியளித்தும் தரம் உயர்த்த வட்டார ஒருங்கிணைப்பாளர் பொறுப்பாக்க வேண்டும். சங்கத்தின் மேம்பாட்டிற்கு நிர்வாகிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு தரமதிப்பீட்டு குழு வழிகாட்டுதலாக இருக்கும்.

**தரம்பிரித்தல் குழுவிற்கு வழங்கப்படும் மதிப்பூதியம்**

ஒரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களை தரம் பிரித்தலுக்காக மதிப்பூதியம் ரூ. 500 நிர்ணயிக்கலாம். அதில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு ரூ. 50/– சேவை கட்டணமாகவும் தரம் பிரித்தல் பணிக்காக குழுவிற்கு ரூ.450/– வழங்கலாம்.

**தரம் பிரித்தலை கண்காணித்தல்**

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களை தரம் பிரித்தல் பணிக்கு முன்பாக, தரம்பிரித்தல் குழுவினருக்கு பயிற்சி அளிக்கப்படவேண்டும். பயிற்சியின் போது மாதிரிப் படிவங்களுடன் ஒரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் தரம்பிரித்தல் குழுவினரை களப் பரிசோதனையில் ஈடுபடச் செய்து சந்தேகங்களுக்கு தெளிவுரை நல்க வேண்டும்.

- தரம் பிரித்தல் குற்றம் காணும் முயற்சி அல்ல கற்கும் முறையாக, நட்பு ரீதியில் அணுக வேண்டும். இதனால் யாவரும் அக்குழுவின் திறமைகளையும் பலவீனங்களையும் தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைகிறது.
- குழு தரம்பிரிக்கும் பொழுது அந்த வட்டார ஒருங்கிணைப்பாளர் பார்வையாளராகவும் சரியான முறையில் குழு தரம்பிரிக்கின்றதா என்பதை ஆய்வு செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.
- குழு தரம் பிரித்த பிறகு நிறை, குறைகள் மற்றும் கவனம் செலுத்தப்பட வேண்டிய இனங்களைக் கண்டு தீர்மானப் பதிவேட்டில் குழு தரம்பிரிப்பவர் கண்டிப்பாக பதிவு செய்தல் வேண்டும். இக்குறிப்பு குழுவின் அடுத்தக் கூட்டத்தில் முக்கிய பொருளாக எடுத்து விவாதிப்பதற்கு உதவியாக இருக்கும்.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் தரம்பிரித்தல் ஆகஸ்டு – செப்டம்பர் மாதத்திற்குள் செயல்படுத்தல் வேண்டும். சங்க குடியிருப்பு பிரதிநிதிகள் அனைவரையும் வரசெய்வது, தரம்பிரித்தல் முடியும் வரை ஆர்வமாக கலந்துக் கொள்ளச் செய்வது அவசியமாகும்.
- தரம் பிரித்தல் பணி என்பது ஒரு பயிற்சி வகுப்பாகவும் பாடமாகவும் கருதுவது மிக முக்கியம், தரம்பிரித்தல் முடிந்தவுடன் சங்க உறுப்பினர்கள் குறைபாடுகளை நீக்கும் செயலில் ஆர்வமாக ஈடுபட இப்பணி தூண்டுதலாக அமைய வேண்டும்.

**தர ஆய்வுக்குப்பின் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள்**

1. தர ஆய்வு செய்யப்பட்ட சங்கத்தின் தரம் குறித்து அனைத்து குடியிருப்பு பிரதிநிதிகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.
2. தர ஆய்வின் முடிவின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை (பயிற்சி தேவை, நிதியிணைப்பு போன்றவை) சம்மந்தப்பட்ட கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களும் துணைக் குழுக்களும் பங்கேற்று மேற்கொள்ளும்.
3. தர ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட C & D தரம் பெற்ற கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தை தொடர்ந்து கண்காணித்தும், போதிய பயிற்சியளித்தும் தரம் உயர்த்த நிர்வாகிகள் பொறுப்பாக்க வேண்டும். சங்கத்தின் மேம்பாட்டிற்கு நிர்வாகிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு தரமதிப்பீட்டு குழு வழிகாட்டியாக இருக்கும்.

இணைப்பு: கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் தரமதிப்பீட்டிற்கான படிவம் –3

## வட்டார இயக்க மேலாளர்

### வட்டார அளவிலான கூட்டமைப்புகளை தரம் பிரித்தல்

- அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஒருங்கிணைத்து நிதி மேலாண்மையை மேம்படுத்த, சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு துணை புரிந்திட, அரசு திட்டங்களை ஒருங்கிணைத்திட வட்டார அளவிலான கூட்டமைப்பினை தரம் பிரித்தல் அவசியமாகிறது.

**வட்டார அளவிலான கூட்டமைப்புகளை தரம்பிரிக்க கீழ்கண்ட 4 நபர்களை கொண்ட ஆய்வு குழு அமைக்கப்பட வேண்டும்.**

**மண்டல உதவித் திட்ட அலுவலர் தலைமையில் இக்குழு செயல்படும்.**(அருகில் உள்ள மண்டல பொறுப்பு உதவித் திட்ட அலுவலர்)

1. அருகில் உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர் – 1 நபர்
2. அருகில் உள்ள வட்டார அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி –1 நபர்
3. அருகில் உள்ள வட்டார அளவிலான கூட்டமைப்பின் கணக்காளர் – 1 நபர்

மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருது பெற்ற வட்டார அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு தர ஆய்வு குழுவில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

**தரம் பிரித்தலின்போது ஆய்வு செய்யப்படவேண்டிய ஆவணங்கள்**

1. தீர்மான புத்தகம் & வருகைப்பதிவு
2. வங்கி கணக்கு புத்தகம் ( பொது கணக்கு, சமுதாய முதலீட்டு நிதி கணக்கு மற்றும் இதர)
3. வரவு ரசீது மற்றும் செலவின சீட்டு (அ) பணம் பட்டுவாடா ரசீது
4. பொதுப் பேரேடு மற்றும் ரொக்கப் பதிவேடு
5. கடன் விண்ணப்பம் மற்றும் கடன் பேரேடு
6. கடன் கண்காணிப்பு பதிவேடு
7. சொத்து பதிவேடு மற்றும் உறுப்பினர் விவரப் பதிவேடு

**தர ஆய்வுக்குப்பின் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள்**

1. தர ஆய்வு செய்யப்பட்ட குழுவின் தரம் குறித்து அனைத்து உறுப்பினர்களுக்கும், வட்டார அளவிலான கூட்டமைப்பிற்கும் தெரியப்படுத்த வேண்டும்.
2. தர ஆய்வு முடிவின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை (பயிற்சி, நிதியிணைப்பு, ஆதார நிதி / சுழல் நிதி போன்றவை) சம்மந்தப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களும், வட்டார அளவிலான கூட்டமைப்பும் மேற்கொள்ளும்.
3. தர ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட C & D தரம் பெற்ற வட்டார அளவிலான கூட்டமைப்புகளை தொடர்ந்து கண்காணித்தும், போதிய பயிற்சியளித்தும் தரம் உயர்த்த சம்மந்தப்பட்ட வட்டார ஒருங்கிணைப்பாளரை பொறுப்பாக்க வேண்டும். கூட்டமைப்பின் மேம்பாட்டிற்கு வட்டார அளவிலான கூட்டமைப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு தரமதிப்பீட்டு குழு வழிகாட்டியாக இருக்கும்.

**தரம் பிரித்தலை கண்காணித்தல்**

வட்டார அளவிலான கூட்டமைப்புகளை தரம் பிரித்தல் பணிக்கு முன்பாக, தரம்பிரித்தல் குழுவினருக்கு பயிற்சி அளிக்கப்படவேண்டும். பயிற்சியின் போது மாதிரிப் படிவங்களுடன் ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு தரம்பிரித்தல் குழுவினரை களப் பரிசோதனையில் ஈடுபடச் செய்து சந்தேகங்களுக்கு தெளிவுரை நல்க வேண்டும்.

- தரம் பிரித்தல் குற்றம் காணும் முயற்சி அல்ல கற்கும் முறையாக, நட்பு ரீதியில் அணுக வேண்டும். இதனால் யாவரும் அக்கூட்டமைப்பின் திறமைகளையும் பலவீனங்களையும் தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைகிறது.
- அக்கூட்டமைப்பினை தரமதிப்பீட்டு குழு தரம்பிரிக்கும் பொழுது அந்த வட்டார ஒருங்கிணைப்பாளர் பார்வையாளராகவும் சரியான முறையில் குழு தரம்பிரிக்கின்றதா என்பதை ஆய்வு செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.
- குழு தரம் பிரித்த பிறகு நிறை, குறைகள் மற்றும் கவனம் செலுத்தப்பட வேண்டிய இனங்களைக் கண்டு தீர்மானப் பதிவேட்டில் குழு தரம்பிரிப்பவர் கண்டிப்பாக பதிவு செய்தல் வேண்டும். இக்குறிப்பு குழுவின் அடுத்தக் கூட்டத்தில் முக்கிய பொருளாக எடுத்து விவாதிப்பதற்கு உதவியாக இருக்கும்.
- வட்டார அளவிலான கூட்டமைப்பு தரம்பிரித்தல் ஆகஸ்டு – செப்டம்பர் மாதத்திற்குள் செயல்படுத்தல் வேண்டும்.
- கூட்டமைப்பின் குடியிருப்பு மன்ற பிரதிநிதிகள் அனைவரையும் வரசெய்வது, தரம்பிரித்தல் முடியும் வரை ஆர்வமாக கலந்துக் கொள்ளச் செய்வது அவசியமாகும்.
- தரம் பிரித்தல் பணி என்பது ஒரு பயிற்சி வகுப்பாகவும் பாடமாகவும் கருதுவது மிக முக்கியம், தரம்பிரித்தல் முடிந்தவுடன் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் குழுவின் குறைபாடுகளை நீக்கும் செயலில் ஆர்வமாக ஈடுபட இப்பணி தூண்டுதலாக அமைய வேண்டும்.

**தரம்பிரித்தல் குழுவிற்கு வழங்கப்படும் மதிப்பூதியம்**

ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு தரம் பிரித்தலுக்காக மதிப்பூதியம் ரூ. 500 நிர்ணயிக்கலாம். அதில் வட்டார அளவிலான கூட்டமைப்பிற்கு ரூ. 50/– சேவை கட்டணமாகவும் தரம் பிரித்தல் பணிக்காக குழுவிற்கு ரூ.450/– வழங்கலாம். மேலும் சேவை கட்டணத்திலிருந்து தரம் பிரித்தல் படிவம் அச்சடித்திட ரூ.1.00க்கு மிகாமல் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இணைப்பு: வட்டார அளவிலான கூட்டமைப்புக்களின் தரமதிப்பீட்டிற்கான படிவம்–4